# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

**SUMMATIVE ASSESSMENT - I ( 2014-2015 )**

| | | |
|---|---|---|
| Class : VI | **Tamil** | ஆறாம் வகுப்பு |
| Time : 3 hours | **தமிழ்** | நேரம் - 3 மணி |
| Marks : 90 | | மதிப்பெண்கள் - 90 |

**பிரிவு - அ**

**1 ) கொடுக்கப்பட்டுள்ள உரைநடையைப் படித்துப் பொருளுணர்ந்து கேட்கப் பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

" அண்ணன் பிள்ளையை நம்புவதைவிடத் தென்னம்பிள்ளையை நம்பு" என்பது பழமொழி.தென்னை வளர்க்க தேர்ந்த இடம் மணற்பாங்கான ஆகும். மணற்பாங்கான இடம் கிடைக்கவில்லையெனில் மணல் கொட்டி , எரு இட்டுத் தென்னங்கன்றுகளை நட வேண்டும்.முழங்கால் அளவிற்குச் சதுர குழிகளை வெட்டிச் சிறிது மணல் கொட்டி தண்ணீர் இட்டுத் தென்னங்கன்றுகளை நட வேண்டும்.தென்னை நாற்றுகளை வேளாண்பண்ணைகள் மூலம் பெறலாம். ஐந்து ஆண்டுகளில் தென்னங்கன்றுகள் வளர்ந்து மரமாகும்.தென்னை தான் உண்ட நீரை இனிப்பாக்கி, இளநீராக நமக்குத் தருகிறது. தினம் ஒரு இளநீர் குடித்தால் எந்த நோயும் வந்தவழி போகும்.தேங்காய் சமையலுக்குப் பயன் படுகிறது.கொப்பரைத் தேங்காயிலிருந்து தேங்காய் எண்ணெய் எடுக்கப் படுகிறது.தேங்காய் எண்ணெய் சமையலுக்கும்,வளர்க்கும் முடிவளத்திற்கும் ஏற்றது.தென்னை ஓலை கூரை வேய பயன்படுகிறது.தென்னை மரங்கள் தமிழ்நாடு, கேரளம், யாழ்ப்பாணம், அந்தமான் கடற்கரையோரங்களில் மிகுதியாகக் காணப்படுகிறது

**வினாக்கள்** **10**

i) தென்னங்கன்றுகளை எவ்வாறு நட வேண்டும் ?

ii ) தேங்காய் எண்ணெய் எதிலிருந்து எடுக்கப்படுகிறது ? அதன் பயன் யாது ?

iii ) தென்னை மரங்கள் மிகுதியாகக் காணப்படும் இடங்கள் யாவை ?

iv ) தேங்காய் மற்றும் தென்னை ஓலை எவ்வாறு பயன்படுகிறது ?

v ) தென்னங்கன்றுகள் ______________ வளர்ந்து மரமாகும்.

அ) ஒன்பது ஆண்டுகளில் ஆ) ஐந்து ஆண்டுகளில்

இ ) இரண்டு ஆண்டுகளில் ஈ ) பத்து ஆண்டுகளில்

vi ) தென்னை நாற்றுகளை ______________ மூலம் பெறலாம்.

அ) வேளாண் பண்ணைகள் ஆ) கால்நடைப்பண்ணைகள்

இ ) அறிவியல் ஆராய்ச்சிக்கூடங்கள் ஈ ) பல்கலைக்கழகங்கள்

2 ) **கடிதம் எழுதுக.** **8**

உடல்நலமின்மையால் பள்ளிக்கு வர இயலாமை குறித்து வகுப்பு ஆசிரியருக்கு விடுப்பு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

3 ) **கட்டுரை எழுதுக.** **8**

உனக்குப் பிடித்தமான பறவை அல்லது விலங்கு

<u>பிரிவு - ஆ</u>

4 ) **பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3 x 1 = 3**

**i) தனிநிலை இடம்பெறும் சொல்**

அ) பாரதி ஆ) எ.ஃ.கு

இ ) அருள்நிதி ஈ ) மைதானம்

**ii) பெயர்ச்சொல்**

அ) உறுமீன் ஆ) கழுகு

இ ) ஓடினான் ஈ ) ஆடினாள்

**iii) ஈரெழுத்துச்சொல்**

அ) பாவை ஆ) தை

இ ) தேநீர் ஈ ) வேடன்

5 ) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.** **3 x 1 = 3**

**i)** உயிர் எழுத்துகள் __________ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று

இ ) நான்கு ஈ ) ஐந்து

**ii)** மென்மையான ஓசையுடன் ஒலிக்கும் மெய்யெழுத்துகள் _________ ஆகும்.

அ) வல்லினம் ஆ) மெல்லினம்

இ ) இடையினம் ஈ ) உயிர்மெய் நெடில்

**iii)** மிகவும் - என்ற பொருள் தரும் உரிச்சொல் __________.

அ) உறு ஆ) மா

இ ) தவ ஈ ) நனி

6 ) **அடைப்புக்குறிக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.**

**i) நகர்** ( தகுந்த உரிச்சொல் சேர்த்து எழுதுக ) **3 x 1 = 3**

அ ) முத்து நகர் ஆ) தூங்காநகர்

இ ) விருது நகர் ஈ ) மாநகர்

**ii) தாமரை மலர் அழகானது** ( உயிர்மெய் நெடில் எழுத்துகளை எடுத்தெழுது )

அ ) தா, ரை, கா　　　　ஆ) தா, கா, து

இ ) தா, ம, கா　　　　ஈ ) அ, ழ, ல

**iii) கோவில் கட்டினான்** ( இடைச்சொல் சேர்த்து எழுதுக )

அ ) ஆலயம் கட்டினான்　　　　ஆ) சோழன் கோவில் கட்டினான்

இ ) கோவிலைக் கட்டினான்　　　　ஈ ) கோவில் சென்றான்

**7 ) பொருத்தமான இலக்கணக் குறிப்பினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**i) கௌரவம்** **3 x 1 = 3**

அ ) நான்கெழுத்துச்சொல்　　　　ஆ) மூன்றெழுத்துச்சொல்

இ ) ஆறெழுத்துச்சொல்　　　　ஈ ) ஐந்தெழுத்துச்சொல்

**ii) கோலம்**

அ ) பெயர்ச்சொல்　　　　ஆ) வினைச்சொல்

இ ) இடைச்சொல்　　　　ஈ ) உரிச்சொல்

**iii) க, ங, ச, ஞ, ட , ந, ப, ம, ய**

அ ) வல்லினம்　　　　ஆ) மெல்லினம்

இ ) உயிர்மெய் குறில்　　　　ஈ ) உயிர்மெய் நெடில்

**8 ) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3 x 1 = 3**

**i)** அ) தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும்.

ஆ) தமிழ் இலக்கணம் நான்கு வகைப்படும்.

இ) தமிழ் இலக்கணம் ஆறு வகைப்படும்.

**ii)** அ) பலாச்சுளை - இச்சொல்லில் இடம்பெற்றுள்ள **சு** என்னும் எழுத்து உயிர்மெய் குறில் எழுத்து ஆகும்.

ஆ) பலாச்சுளை - இச்சொல்லில் இடம்பெற்றுள்ள **சு** என்னும் எழுத்து உயிர்மெய் நெடில் எழுத்து ஆகும்.

இ) பலாச்சுளை - இச்சொல்லில் இடம்பெற்றுள்ள **சு** என்னும் எழுத்து ஆய்த எழுத்து ஆகும்.

**iii)** அ ) **ஐ, ஆல், கு** என்பன உரிச்சொல் ஆகும்.

ஆ ) **ஐ, ஆல், கு** என்பன இடைச்சொல் ஆகும்.

இ ) **ஐ, ஆல், கு** என்பன இடையினம் ஆகும்.

## பிரிவு - இ

9 ) **கீழ்காணும் உரைநடையைப் படித்துக் கீழே கேட்கப்பட்டுள்ள பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

வேங்கை நாடு ஓர் அழகான நாடு. அந்நாட்டை வேங்கை மார்பன் என்னும் மன்னர் ஆண்டு வந்தார்.அவர் வயதில் இளையவர்.இளைஞர்களால் நாடு முன்னேறும்.முதியவர்களால் நாட்டுக்குப் பயன் ஒன்றும் இல்லை எனக் கருதினார்.அவர்,தலைமை அமைச்சரை அழைத்து, முதியவர்களால் நாட்டுக்குப் பயன் ஒன்றும் இல்லை.அவர்கள் நாட்டுக்குச் சுமைதான். அவர்களை நாடு கடத்திவிடுங்கள் என ஆணையிட்டார்.இதனைக் கேட்ட தலைமை அமைச்சர் அதிர்ச்சி அடைந்தார்! முதியவர்களால் பயன் ஒன்றும் இல்லையா ? அவர்கள் நாட்டுக்குச் சுமையா ? அவர்களின் பட்டறிவு நாட்டுக்குத் தேவை அல்லவா! ஆனால், இ∴து அரசரின் ஆணை என்று தனக்குள் நினைத்தார். ஆதலால், அப்படியே செய்கிறேன், அரசே ! எனக் கூறினார்.

**வினாக்கள்** **5 x 1 = 5**

**i)** வேங்கை நாட்டை ஆண்ட மன்னன் ________.

அ) வேங்கை ராஜன் ஆ) வேங்கை மார்பன்

இ) வேங்கையன் ஈ) வேங்கை வளவன்

**ii)** மன்னர் ________ நாடு முன்னேறும் எனக் கருதினார்.

அ) சிறுவர்களால் ஆ) இளைஞர்களால்

இ) முதியவர்களால் ஈ) அமைச்சர்களால்

**iii)** __________ முதியவர்கள் நாட்டுக்குச் சுமை என்று கூறினார்.

அ) தலைமை அமைச்சர் ஆ) வேங்கை நாட்டு மன்னன்

இ) படைத்தளபதி ஈ) தலைமைப்புலவர்

**iv)** ஆணை என்பதன் பொருள் ________.

அ) கட்டளை ஆ) பாரம்

இ) சுமை ஈ) செயல்

**v)** முதியவர்களின் ________ நாட்டுக்குத் தேவை.

அ) பலவீனம் ஆ) பட்டறிவு

இ) சேமிப்பு ஈ) சேவை

10 ) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5 x 1 = 5**

**i) வெளிநாட்டிலிருந்து வந்த அறிஞரின் பெயர் ________.**

அ) செழியன் ஆ) செல்வன்

இ) செங்குட்டுவன் ஈ) சரவணன்

**ii ) கயல்விழியின் அம்மா படித்த புத்தகத்தின் பெயர் ________.**

அ) பாரதியார் கவிதைகள் ஆ) பொன்னியின் செல்வன்

இ) பச்சைக்கிளி ஈ) பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள்

**iii ) பிறர் நமக்குச் செய்த ________ உடனே மறத்தல் வேண்டும்.**

அ) நன்மையை ஆ) நன்றியை

இ) தீமையை ஈ) உதவியை

**iv) தமிழர்களின் அறநூல் ________.**

அ) திருக்குறள் ஆ) வளையாபதி

இ) பாரதிதாசனின் இருண்ட வீடு ஈ) கவிமணியின் மலரும் மாலையும்

**v) இடும்பை - என்பதன் பொருள் ________.**

அ) இன்பம் ஆ) துன்பம்

இ) தோல்வி ஈ) விருப்பம்

11 ) **கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5 x 1 = 5**

i) சோலையில் பல ________ பூத்துக் குலுங்கின.

ii ) எறும்பு சங்கின் எதிர்ப்புறம் வர ________ வைக்கப்பட்டது.

iii ) **வாடை** - என்ற சொல்லின் பொருள் ________.

iv) முசுண்டைக் கொடிகள் ________ படர்ந்து இருந்தன.

v) பீர்க்கு + அம் + மலர் = ________.

12 ) **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

அ) **பொருள் தருக.** **4 x 1/2 = 2**

i ) ஏனம் iii ) சினம்

ii ) கார்காலம் iv ) பிச்சி

ஆ ) **பிரித்து எழுதுக.** **4 x 1/2 = 2**

i ) நீர்த்துளிகள் iii ) முரசறைந்து

ii ) மணங்கமழும் iv ) வித்தாகும்

இ ) **சேர்த்து எழுதுக.** **4 x 1/2 = 2**

i ) பொன் + காசு iii ) தன் + நெஞ்சு

ii ) நெல் + கதிர் iv ) தீ + ஒழுக்கம்

ஈ ) **எதிர்ச்சொற்களை இட்டுத்தொடரை நிறைவு செய்க.** **4 x 1/2 = 2**

i ) அனைவரும் **ஒற்றுமை**யுடன் வாழ வேண்டும்; _____எதிர்த்து நிற்க வேண்டும்.

ii ) **சிற்றூரின்** அருகே அருவி உள்ளது; தூரத்தில் ________ உள்ளது.

iii ) மரத்தின் **மேல்** பறவை இருந்தது ; மரத்தின் _____ மயில் ஆடியது.

iv ) விளையாட்டில் **வெற்றியையும்,** _______ சமமாகக் கருதுதல் வேண்டும்.

**உ ) முதல் எழுத்தை மாற்றி வேறு வேறு சொல்லாக்குக.** **8 x 1/4 = 2**

i ) சுடு - ______, ______, ______, ______

ii ) நாடி _______, _______, ________, _______.

**ஊ ) தொடர் அமைத்து எழுதுக.** **2 x 1 = 2**

i ) கனிமரங்கள் ii ) குளிர்ந்த காற்று

**எ ) சொற்களின் முன்னால் வருணனைச் சொற்களை இணைத்துத் தொடரை நீட்டுக.** **1 x 2 = 2**

வரிக்குதிரை ( அல்லது ) வண்ண மயில்

13 ) ஏதேனும் **இரண்டு** வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடை தருக. **2 x 2 = 4**

**அ)** அறிஞர் கூறிய செயலைச் செய்பவருக்கு மன்னர் அறிவித்த பரிசு யாது ?

**ஆ )** ஏன் சினத்தை அடக்க வேண்டும் ?

**இ )** மதிவாணன் " என்னைப் பொறுத்தருள வேண்டும் " என்று ஏன் கூறினான் ?

14 ) ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக. **3 x 4 = 12**

**அ )** வெளிநாட்டிலிருந்து வந்த அறிஞர் கூறிய செயல்கள் யாவை ?

**ஆ )** கார்காலக் காட்சியைப் பற்றிக் கூறுக.

**இ )** திருக்குறள் - சிறு குறிப்பு வரைக.

**ஈ )** சாம்பலில் கயறு செய்தது எப்படி ?

15 ) **அடிபிறழாமல் எழுதுக.** **2 x 2 = 4**

**அ )** நன்றிக்கு - எனத் தொடங்கும் திருக்குறள்

**ஆ )** சொல் - என முடியும் திருக்குறள்.